

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களைப் பெற்ற விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அறிமுகம் மற்றும் இந்தியா கூட்டணி செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் விக்கிரவாண்டியில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்பு செயலாளர் எஸ் .ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி வரவேற்புரையாற்றினார். அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, எஸ்.எஸ்.சிவசங்கர், சி.வெ.கணேசன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கூட்டணிக் கட்சித் தலைவர்கள் செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ, தொல் திருமாவளவன் எம்.பி, தி.வேல்முருகன் எம்.எல்.ஏ, சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி,சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் துரை ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் சமது, சரவணன், ஜோதி, கிரி, அம்பேத்கர், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் எ.வ.வே.கம்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டியில் எதிர்க்கட்சியினர் டெபாசிட் இழப்பார்கள்!

# மோடி அரசு இன்னும் 5 மாதங்களில் கவிழ்ந்து விடும்!

### ஈரோட்டில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் எம்.எல்.ஏ. பேட்டி!

ஈரோடு, ஜூன் 16-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:



சென்னையில் கடந்த 11ந் தேதி காமராஜர் இல்லத்தில் காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எல்லோரும் காங்கிரஸ் கட்சியை வளர்க்க வேண்டும் என்றும், நடை பயணம் செல்ல வேண்டும், அதிக அளவில் பூத் கமிட்டி அமைக்கப்பட வேண்டும், இளைஞர்களை அதிக அளவில் காங்கிரஸ் கட்சியில் சேர்க்க வேண்டும் என அவர் தெரிவித்த கருத்து முரணாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதுகுறித்து செல்வப்பெருந்தகை விளக்கமளித்து விட்டார்.

உள்ளாட்சித் தேர்தலில் கூட்டணி வைக்க வேண்டாம் என முன்னாள் எம்.பி. ஒருவர் கருத்து சொன்னார். அதற்கு எதிர்ப்பு கிளம்பியது. உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடும்போது கூட்டணி வைத்தால் தான் வெற்றி பெற வாய்ப்பு கிடைக்கும்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பல இடத்தில் மேயர் மற்றும் கவுன்சிலராக இருப்பதற்கு கூட்டணி தான் காரணம். கூட்டணி இருந்தால் தான் மக்களை சந்திக்கவும் வெற்றி பெறவும் வாய்ப்பாக அமையும்.

கூட்டணிக்குள் சில கருத்து வேறுபாடுகள், பிரச்சினைகள் இருப்பது சகஜம். வரும் உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி வைத்து தான் காங்கிரஸ் போட்டியிடும். அதில் எந்த மாற்றமும் இல்லை.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் மக்கள் பணியாற்றி வருகிறார். அவர் ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் தலைவராக விளங்குகிறார். எனவே அவரது கரங்களையும் ராகுல் காந்தியின் கரங்களையும் வலுப்படுத்த வேண்டும். தற்போது நாம் வளர வேண்டும் என்பதை விட ஏற்கனவே வளர்ந்து விட்ட பா.ஜ.க மற்றும் மோடி என்னும் தீய சக்தியை ஒழிக்க ஒற்றுமையுடன் பாடுபட வேண்டும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி பொற்கால ஆட்சி என்று சொல்வதற்கு பதிலாக நவீனத்திற்கு ஏற்ப ஸ்டாலின் ஆட்சி காமராஜர் ஆட்சி என்று சொல்வேன்.

தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் படித்தவர்களாக இருப்பதற்கு காரணம் காமராஜர். அவர் மதிய உணவுத் திட்டத்தை கொண்டு வந்தார்.

தற்போது எத்தனையோ நிதி நெருக்கடி இருக்கும் சூழலிலும் அனைத்து அரசு பள்ளிகளிலும் காலை உணவு திட்டம் கொண்டு வரப்பட்டது.

மதிய உணவு தந்த காமராஜருடன் காலை உணவு திட்டம் தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஒப்பிடுவது என்ன தவறு. தமிழகத்தில் உள்ள தாய்மார்கள் மு.க.ஸ்டாலின் அவர்கள் பின்னால் நிற்கிறார்கள்.

நான்கு முனை போட்டியில் வாக்குகள் சிதற தான் செய்யும். கடந்த தேர்தலில் மூன்று முனை போட்டி ஏற்பட்டது. நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் பா.ம.க, பாரிவேந்தர், ஏ.சி. சண்முகம் போன்றவர்களால் தான் பா.ஜ.க.வுக்கு வாக்கு சதவீதம் உயர்ந்துள்ளது.

தமிழிசை சவுந்தரராஜனை அமித்ஷா மேடையில் திட்டி எச்சரிக்கை செய்தது கண்டிக்கத்தக்கது. கட்சி பாகுபாடு இன்றி அவர் தமிழச்சியாக இருப்பதால் அதனை நான் கண்டிக்கிறேன்.

முஸ்லிம்கள் 25 சதவீதம் பேர் உள்ள நிலையில் ஒருவருக்கு கூட பா.ஜ.க சீட் கொடுக்கவில்லை. அப்படி இருக்கும் போது இந்தியாவுக்கு எப்படி பொதுவான அரசாக இருக்க முடியும். காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவராக ராகுல்காந்தி வரவேண்டும்.

நீட் தேர்வு குளறுபடி காரணமாக தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆரம்பம் முதல் நீட் வேண்டாம் என்றார். தற்போது கேட்டால் காங்கிரஸ் தான் நீட் தேர்வு கொண்டு வந்தது என்பார்கள். காங்கிரஸ் நீட் தேர்வு கொண்டு வந்த போது மாநிலங்கள் விருப்பத்தின் பேரில் நடந்து கொள்ளலாம் என்று சொன்னது.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் எதிர்க்கட்சியினருக்கு டெபாசிட் கூட கிடைக்காது. காங்கிரஸ் கட்சி சார்பில் தலைவர் செல்வப்பெருந்தகையும், நானும் பிரச்சாரம் செய்வோம்.

நாம் தமிழர் கட்சி மாநில அந்தஸ்து பெற்றதை வரவேற்கிறேன்.

நெல்லை காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் ஜெயக்குமார் கொலை வழக்கில் உடனடியாக எப்படி குற்றவாளியை கண்டு பிடிக்க முடியும். காவல் துறையினர் கைது செய்தால் தான் உண்மை என்னவென்று தெரிய வரும்.

இன்னும் மோடி தலைமையிலான ஆட்சி 5 மாதங்களில் கலைந்து விடும். இதற்கு பா.ஜ.க கூட்டணியில் உள்ள கட்சிகளே காரணமாக இருக்கும் என ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் செய்தியாளர்களிடம் கூறினார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் 170 -வது வட்ட மாணவரணி துணை அமைப்பாளர்

# எம்.மனோகரன் - பிரியதர்ஷினி திருமணம்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

### அமைச்சர்கள் க.பொன்முடி - செஞ்சி மஸ்தான் - க.சுந்தர் எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 16-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், சைதை கிழக்குப் பகுதி 170-வது வட்ட மாணவணி துணை அமைப்பாளர் எம்.மனோகரன் - எம்.பிரியதர்ஷினி ஆகியோரது திருமணத்தை நாளை (17.6.2024-திங்கள்) காலை 9.30 மணி அளவில் சென்னையில் தனது இல்லத்தில் கழக இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நடத்தி வைக்கிறார்.

இம்மணவிழாவில் பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.மாசிலாமணி எம்.எல்.ஏ., சீத்தாபதி சொக்கலிங்கம், திண்டிவனம் ஆர். சேதுநாதன். கே.கௌரி கண்ணன், 170-வது வட்டச் செயலாளர் கோட்டூர் க.மணி, 170 அ வட்டச் செயலாளர் கோட்டூர் கோ.சண்முகம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர்-அமைச்சர் க.பொன்முடி, அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சென்னை துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

சென்னை எம்.முனுசாமி - முருவம்மாள் ஆகியோரது புதல்வரும் வட்ட மாணவரணி துணை அமைப்பாளருமான எம்.மனோகரன், திண்டிவனம் வட்டம் ஓலக்கூர் டி.முனியன் - எம்.லட்சுமி ஆகியோரது புதல்வி எம்.பிரியதர்ஷினி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி நாளை (17.6.2024) மாலை 6 மணி அளவில் சென்னை ஜி.எஸ்.டி.சாலை கே.ஆர்.எஸ்.அம்மா மகாலில் நடைபெறுகிறது.

இதில் சைதை எஸ்.குணசேகரன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், சைதை கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன். ஆர். ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, கோட்டூர் எஸ்.பிரகாஷ், எஸ்.புவனேஸ்வரி, •ஏ.பார்வதி, ஆர். சேதுராமன், சைதை கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் சைதை மு.இராஜா, நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.ஜெ.சலாம், எஸ். ரவி, கோட்டூர் ந.பாபு, கே.எம்.எஸ்.கணேசன், மு. மகேஷ்லாரன்ஸ், டி.வி.நரசிம்மன், ச.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், க.உமாபதி மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

**கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிவிப்பு!**

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (17-06-2024 - திங்கட்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் உள்ள "தி.மு.க. சட்டத்துறை அறையில்" எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : வழக்கறிஞர் அணி செயல்பாடுகள் குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.6.2024

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை.

# பிரதமர் மோடியின் பாய்ச்சலும் - பதுங்கலும்

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்



இந்தியா என்பது ஒரு துணைக்கண்டம் என்பதற்கான அனைத்துக் காரணங்களும் இயற்கையாகவே அமைந்துள்ளது என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் தீர்க்கமான முடிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆங்கிலேயர்களின் அந்நிய ஆட்சி என்பது சற்றேறக் குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் இந்திய நிலப்பகுதியில் நடைபெற்றுள்ளது. ஆங்கிலேயர்களின் நிர்வாக ஏற்பாட்டிற்காகவும், வசதிக்காகவும் இந்திய நிலப் பரப்பில் அன்றைய காலகட்டத்தில் பரவியிருந்த 500க்கும் மேற்பட்ட "சமஸ்தானங்கள்" அனைத்தையும் ஒரு ஆட்சியின்கீழ் நிர்வாக ஏற்பாடாக ஒன்றிணைத்தார்கள் என்பதெல்லாம் பதிவு செய்யப்பட்ட, மறுக்க முடியாத உண்மைகளாகும்.

இந்திய நிலப்பகுதியில் இனம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் வேறுபட்ட மக்களுக்கான சிற்றரசுகள் ஆங்காங்கு அமைந்திருந்தன என்பதும் மறுக்க முடியாத வரலாற்றுப் பதிவுகளாகும். இந்த வரலாற்று உண்மைகளையும், இந்தியப் புவியியல் அமைப்பின் பன்முகத் தன்மையின் அடிப்படையிலும் ஆய்வுசெய்து எத்தகைய ஆட்சிமுறையும், அணுகுமுறையும், இந்தியாவின் ஒற்றுமைக்கு வலிமை சேர்க்கும் என்பதையும், மக்களுடன் நெருக்கமான உறவும், தொடர்பும் கொண்டுள்ள மாநில அரசுகள் எந்த அளவிற்கு அதற்கான அதிகாரங்களை பெற்றிட வேண்டும் என்ற கருத்தினையும் மையப்படுத்தி "இந்து" ஆங்கில நாளிதழில், ஓய்வு பெற்ற தலைநகர் டில்லி ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் அருண்குமார் அவர்கள் "மத்திய அரசு என்பது சூழ்நிலைகளை மையப்படுத்தி உருவாக்கப்பட்டது, ஆனால் மாநில அரசு என்பது இயல்பானதும், இயற்கையானதும்" ஆகும் என்பதோடு (The centre is notional, the states the real entities) இதுபோன்று பல்வேறு ஆணித்தரமான காரணங்களின் அடிப்படையில் தன்னுடைய கருத்தினை கட்டுரை மூலம் நிலை நாட்டுகிறார்.

அதுமட்டுமல்ல, இனி மாநில அரசுகளுக்கு எந்தெந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும், எனவும் மத்திய அரசுக்கு எத்தகைய குறிப்பிட்ட அதிகாரங்கள் வழங்கினால் போதுமானது என்பதையும், ஆய்வுசெய்து எச்சரிக்கைக் குரலில் வெளிப்படுத்தியுள்ளார்.(The results of the general election 2024 have thrown up a surprise. They portend greater democratisation in the country, with the regional parties doing well. These parties will share space on the ruling party benches as well as on the oppo sition side in parliament. This will help strengthen federal ism, which is so crucial for a diverse nation such as India. It was badly fraying till recently.) இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆந்திர பிரதேச மாநிலத்தில் ஆட்சி அமைத்துள்ள தெலுங்கு தேசக் கட்சியினுடைய தலைவர் சந்திர பாபு நாயுடு, பீகார் மாநிலத்தில் ஆட்சி அமைத்துள்ள ஐக்கிய ஜனதாக் கட்சி தலைவர் நிதீஷ்குமார் ஆகிய இரண்டு மாநில கட்சிகளின் தலைவர்களுடைய ஆதரவுடன்தான் மத்தியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியை (National Democratic Alliance) பிரதமர் நரேந்திரமோடியால் மூன்றாவது முறையாக ஆட்சியமைக்க முடிந்துள்ளது. இதில் அரசியல் நோக்கர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான கருத்துக்கள் எதுவெனில் பிரதமர் நரேந்திரமோடி தன்னுடைய தேர்தல் பிரச்சார மேடைகளில் "அயோத்தி இராமர் கோயில்" பிரச்சினை, "ஒரேநாடு ஒரேதேர்தல்" என்ற பிரச்சினை, இறுதியில் "தான் இயற்கையான மனிதப் பிறவியல்லமாறாக கடவுளின் அவதாரம்" என்கின்ற முரண்பட்ட கருத்துகளை மையப்படுத்தி உரையாற்றி வாக்குச்சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார், எதிர்க்கட்சிகளை யெல்லாம் கடுமையாக எச்சரித்தார், "வெறுப்புப் பேச்சுகளை" தேர்தல் பிரச்சாரமாக்கினார்.

ஆனால் இந்திய நாட்டு மக்கள் பன்முகத் தன்மைக் கொண்ட இந்திய நாட்டிற்கு, இத்தகைய தேர்தல் பிரச்சாரங்கள் எதிர்காலத்தில் நாட்டின் ஒற்றுமைக்கு பெரும் தீங்கினை விளைவிக்கும் என்று கருதிதான் பிரதமர் நரேந்திரமோடி தனிப்பெரும்பான்மையோடு ஆட்சி அமைக்க அனுமதிக்காததோடு, மாநிலக் கட்சிகளின் துணையுடன்தான் கூட்டணி ஆட்சியை அமைக்க முடியும் என்ற சூழ்நிலையை, இந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் "மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுய ஆட்சி" என்ற இலக்கு நோக்கிய சரியான திசை வழியை காட்டியுள்ளார்கள் என்பதே இந்த தேர்தல் முடிவுகளின் சரியான கணிப்பாகக் கருத முடியும்.

கட்டுரையாளர் பேராசிரியர் அருண்குமார் மத்திய அரசு என்பது நிர்வாக ஏற்பாட்டிற்காக உருவாக்கிக் கொண்டதுதான். ஆனால், மாநில அரசுகள் என்பது இயல்பாகவும், இயற்கையாகவும் அந்தப்பகுதி மக்களால் ஏற்றுகொள்ளப்பட்டு அவர்களின் உணர்வுகளோடு இரண்டறக் கலந்து தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்ற ஆட்சிஅமைப்புகளாகும். இந்த அடிப்படைக் கருத்துகளை உள்ளடக்கிய தலைப்புத்தான் பேராசிரியர் அருண்குமாரின் கட்டுரைத்தலைப்பாகும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் வேறுபட்ட பிரச்சினைகள் இருக்கக் கூடும். அசாம் மாநிலத்தில் உள்ளது போன்று, குஜராத் மாநிலத்தில் பிரச்சினைகள் இருப்பதில்லை, இமாச்சலப் பிரதேசத்தில் இருப்பது போன்று, தமிழ்நாட்டில் பிரச்சினைகள் இருப்பது இல்லை, மாநிலத்திற்கு மாநிலம் பன்முகத்தன்மைகொண்ட இந்தியாவில் நிரந்தரமாக'நிலவியிருப்பது இயல்பானதும், இயற்கையானதுமாகும்!! இந்த வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்திய அரசினுடைய ஒரே மாதிரியான அணுகுமுறை என்பது எதிர்பார்க்காத வேறுபல விளைவுகளையே உருவாக்கி விடும்.

எனவே, சுயாட்சி பெற்ற மாநிலங்களாக இருந்தால் தான், தங்கள் மாநிலங்களுக்கு ஏற்ப வேறுபட்ட பொருத்தமான அணுகுமுறைகளை கடைப்பிடித்து பிரச்சினைகளுக்கு முடிவு காண முடியும். அத்தகைய நடவடிக்கை தான் கூட்டாட்சியாகவும், ஜனநாயகமாகவும் கருதப்படும், மாறாக உச்சபட்ச அதிகாரங்களை கையில் வைத்திருக்கின்ற மத்திய அரசாக இருக்குமானால், மத்திய அரசின் விருப்பங்களை மாநில அரசுகள் மீது திணிக்க முற்படும். இதன்மூலம் மத்திய -மாநில உறவுகள் சீர்கெட்டுப் போகும். எனவே இத்தகைய நடவடிக்கைகள் இன்றைய இந்திய ஒன்றியத்தின் எதிர்காலத்திற்கு உகந்ததல்ல. (Assam is unlike Gujarat and Himachal Pradesh is very different from Tamil Nadu. A common approach is not conducive to the progress of such diverse States. They need greater autonomy to address their issues in their own unique ways. This is both democracy and federalism. So, a dominant centre forcing its will on the states, leading to the deterioration in centre-state relations, does not augur well for India.)

பாரதிய ஜனதாக் கட்சி பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் 2014 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்புக்கு வந்ததிலிருந்து தொடர்ந்து இந்திய அரசியல் சட்டத்தை சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை சுட்டிக்காட்டி, பல்வேறு கட்டங்களில் கடுமையான அரசியல் விமர்சனங்களை முன்வைத்து பல்வேறு கட்டுரைகள் பல்வேறு மொழிஊடகங்களிலும் வெளிவந்துள்ளது. குறிப்பாக இந்திய அரசியல் சட்டத்தினுடைய முன்னுரையில் குறிப்பிட்டுள்ள மதச்சார்பற்ற கோட்பாடு (secularism) பற்றி பாரதிய ஜனதாக் கட்சியும், அந்த கட்சிக்கு சித்தாந்த ஆலோசனைகள் வழங்கிக் கொண்டிருக்கும் ராஷ்டிரிய சுயம் சேவக் சங் அமைப்பும் (RSS) எதிர்த்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததோடு, பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவை இந்துக்களுக்கு மட்டுமே உரித்தான "இந்துராஸ்ட்ரமாக" மாற்றும் முயற்சிக்கான உள்கட்டமைப்புகளை, தங்களின் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி உருவாக்கிக் கொண்டே வந்தனர்.

இந்திய அரசியல் சட்டம் குறிப்பிடுகின்ற இறையாண்மையுள்ள, ஜனநாயகக் குடியரசு ஆட்சி முறையை மாற்றி (Sovereignty,Democratic republic) ஜனாதிபதி ஆட்சி முறையை (Presidential form of government) கொண்டு வரும் உள்நோக்கம் கொண்ட முயற்சியிலும் ஈடுபட்டனர். இந்திய அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக, ஆட்சி முறை மாற்றத்திற்கு ஏதுவாக மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகார பட்டியலில் இருந்து அதிகாரங்களை கைப்பற்றி மத்தியில் குவிக்கின்ற முயற்சியையும் திட்டமிட்டு மேற்கொண்டார்கள். எதிர்க்கட்சிகள் ஆட்சியில் உள்ள மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலும் பாரபட்சம் காட்டினார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார் மீதும் வருமான வரி, அமலாக்கத்துறை (EDI) மத்திய புலனாய்வுத்துறை(CBI) மூலமாகவும் புதிது புதிதாக வழக்குகளைத் தொடர்ந்து அச்சுறுத்தல்களை அரசியல் ஆயுதங்களாக பயன்படுத்த தொடங்கினர். ஜனநாயகத்தினுடைய நான்காவது தூண் எனக் கருதப்படும் ஊடக உரிமையாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர் அல்லது தங்கள் வசப்படுத்தப்பட்டனர். மாநிலங்களில் அமைந்துள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகளை "குதிரை பேரம்" (Horse trading) நடத்தி துரோகிகளை உருவாக்கினார்கள். இந்த நடவடிக்கைகள் எல்லாம் ஜனநாயக மாண்புகளுக்கும், மரபுகளுக்கும் முற்றிலும் முரண்பட்டவை என்று தெரிந்தே செய்தார்கள்.

ஆனால், இந்த நாடாளுமன்ற தேர்தல் மூலம் இந்த தவறுகளுக்குக் காரணமாக பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு சரியான பாடத்தை மக்கள் கற்பித்திருக்கிறார்கள். மக்கள் வழங்கிய தீர்ப்பின் காரணமாகத்தான் பிரதமர் நரேந்திரமோடி பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள் உருவாக்கிய அரசியல் சட்டத்தை, தேசிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் அனைவருக்கும் தெரியும் வண்ணம் இந்திய அரசியல் சட்டத்தை வணங்குவது போன்ற புகைப்படங்கள் அனைத்து பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, ராஷ்டிரியா சுயம் சேவக் சங் அமைப்பின் தலைவர் மோகன் பகவத் எதிர்க்கட்சிகள் எதிரிக் கட்சிகள் அல்ல என்று பிரதமர் நரேந்திரமோடிக்கு அருளாசிமூலம் அறிவுரை வழங்கியிருக்கிறார். (Opposition not an adversary).

பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சியினுடைய ஆட்சி கடந்த பத்தாண்டு காலத்தில் தங்களுக்கு மக்களால் வழங்கப்பட்ட அரசியல் அதிகாரத்தை மக்களின் விருப்பத்திற்கு முரணாகப் பயன்படுத்தி, மாநில அரசுகளின் அதிகாரங்களை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டதோடு, மக்களின் உணர்வுகளுக்கும் எதிராக செயல்பட்டனர். அவர்களது ஆட்சிக் காலத்தில் சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக விவசாயிகள், மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகினார்கள். அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டத்தின் பயன், சட்டத்தின் பாதுகாப்பும் உரியவர்களுக்கு சென்றடையவில்லை. நீட் தேர்வின் மூலமாக தொழிற்கல்வி பெற விரும்பும் மாணவர்கள் எந்த அளவு பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதும், நீட் தேர்வில் எத்தகைய குழப்பங்களும், தவறுகளும் அரங்கேறியுள்ளது என்பதற்கான விளக்கங்கள், அனைத்து பத்திரிகைகளிலும் வெளியாகியிருக்கிறது. வேறுவழியின்றி ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் அரசு உச்சநீதி மன்றத்தினுடைய வழிகாட்டுதலின்படி மறுதேர்வு வைப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய குளறுபடிகள் வரும் என்று தொலை நோக்கோடு சிந்தித்துதான் தமிழகத்திற்கு மட்டுமாவது விதிவிலக்கு வழங்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டார். ஆனால், தமிழகத்திற்கு மட்டும் விதிவிலக்கு வழங்கவியலாது என ஒன்றிய அரசு அடம்பிடித்தது. தமிழ்நாட்டில் உள்ள ஆளுநர் மூலம், ஆளுநர்மாளிகையில்மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட மாடல் ஆட்சிக்கு ஒரு போட்டி அரசை ஆளுநர் நடத்திக் கொண்டிருந்தார் என்பது அனைவரும் அறிந்த உண்மை களாகும். இந்த ஒட்டுமொத்த தவறுகளின் காரணமாகத்தான் இந்திய நாட்டு மக்கள் பாரதிய ஜனதாக் கட்சிக்கு இப்படி ஒரு படிப்பினையை தந்திருக்கிறார்கள்.

மக்களின் முடிவுக்கு தலைவணங்கி ஆட்சியை நடத்தப் போகிறாரா? அல்லது அரசியல் சட்டத்திற்கு தலைவணங்குவதுப் போல் பதுங்கிப்பாய தயாராக இருக்கிறாரா? என்பதை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட இந்திய நாட்டு மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆம்! சிலரை சிலகாலம் ஏமாற்றலாம், எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற இயலாது என்பதே, விழிப்புணர்வு கொண்ட, அதிகாரத்தை அரசுக்கு வழங்கிய இந்திய நாட்டு மக்கள் பிரதமர் நரேந்திர மோடிக்கு விடுக்கும் எச்சரிக்கைக் குரலாகும்!!